# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 மே திங்கள் 11.05.2011–ம் நாள் புதன்கிழமை மதியம் 12.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல் காமராஜர் பேருந்து நிலையத்தில் இயக்குதலும் பேணுதலும் இடை நிரப்புதல் நிதி 2010–11–ன்கீழ் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி செய்து முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்தும் இடம் அமைக்கவும் மற்றும் கழிவு நீரோடை பக்க சுவர்களை உயர்த்தி மூடு சிலாப் அமைக்கவும், மேலும் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் செய்து வர்ணம் பூசவும் மதிப்பீடு ரூ.7,00,000/–க்கு தயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண்.இ1/1815/2011)

**தீர்மானம் எண். 1622 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2011 மே திங்கள் 27.05.2011–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியின் பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள கடைக்கு நகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை ரூ. 1910/– கடையினை ஏலம் விடப்பட்டதில் திரு.செல்வராஜ் என்பவர் 20.10.2010–ல் ஏலத்தில் ரூ.2100/–க்கு மாத வாடகைக்கு எடுத்தார். நகர்மன்ற தீர்மானம் எண்.1487 நாள் 28.10.2010–ல் விளம்பரத்துடன் மறுஏலம் விடவும் கூடுதல் தொகைக்கு ஏலம் விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மறு ஏலம் விடப்பட்டதில் மேற்படி நபர் ரூ. 12,550/–க்கு ஏலக்கேள்வியாக கேட்டுள்ளார். மேற்படி கடைக்கு நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக ரூ.12,550/–க்கு வாடகைக்கு எடுத்துள்ளார். நகர்மன்ற தீர்மானம் எண். 1535 நாள் 06.12.2010–ல் உயர்ந்த ஏலக்கேள்வியாக ஏற்றுக் கொண்டு உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 01.02.2011–ல் திரு.செல்வராஜ் என்பவருக்கு கடை ஒப்படைக்கப்பட்டது. இரண்டு மாத வாடகைத் தொகையினை செலுத்தவில்லை. மேற்படி நபரின் வைப்புத்தொகை ரூ. 25,000/– ஆகும். இரண்டு மாத வாடகைத் தொகை ரூ. 25,100/– ஆகும். எனவே, மூன்றாவது மாதம் அதாவது ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி இறுதி அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதன் பிறகும் வாடகை செலுத்தப்படவில்லை. எனவே கடை வாடகைத் தொகை செலுத்தாததால் 20.04.2011–ல் காவல்துறை பாதுகாப்புடன் திரு.செல்வராஜ், குத்தகைதாரர் முன்னிலையில் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. திரு.செல்வராஜ் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். நீதிமன்றத்தில் வழக்கு எண்.136/2011 நடைபெற்று வருவதால் அவ்வழக்கு 02.06.2011–ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வழக்கில் தடையாணை இல்லாததால் கடையின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலம் விடுவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் முடிவு செய்யலாம்.
( ந.க.எண்.அ1/5751/2009)

**தீர்மானம் எண். 1623 ஆணையரின் விரிவான விளக்கம் கேட்டு ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி TN.74-T 5508 –ன் மின்கலம் மற்றும் சாவி செட் (எஞ்சின் சுவிட்ச் ) ஆகியவை பழுதடைந்து விட்டதால், பொதுத் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் மேற்படி பழுதுகளை ரூ. 8,200/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சிகளின் சட்டம் 1920–ல் பிரிவு 15–ன்கீழ் கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கப்பட்டு மேற்காணும் மினி லாரிக்கு புதிய மின்கலம் மற்றும் சாவி செட் (எஞ்சின் சவிட்ச்) பொருத்தப்பட்டதற்கு மேற்படி நிறுவனத்திற்கு ரூ.8,190/– வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கையின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.எச்1/2913/2009 )

**தீர்மானம் எண். 1624 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் பொது தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் அமுலில் இருந்ததாலும் நகராட்சிகள் சட்டம் 1920–ல் பிரிவு 15–ன் கீழ் கீழ்க்காணும் வேலைகள் கீழ்காணும் மதிப்பீட்டில் துறை மூலம் செய்து பட்டியல் வழங்கப்பட்டுள்ளது கீழ்கண்ட நடவடிக்கை விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | மதிப்பீட்டு எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 1/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் ரோட்டில் Sluice Valve அருகில் 4” pvc pipeline மற்றும் சிங்காரவேலன் காலனியில் 3”pvc pipe line பழுது சரி செய்தல். | 3500 | 3202 |
| 2 | 2/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டி விளை praye house முன்பு 140mm, 63mm pvc pipe line, EB Pole No.FII/45 அருகில்63mm pvc pipe line மேலும் ஆசாரிமார் தெருவில் வீட்டு எண்.4/269 அருகில் 63mm pvc pipeline மற்றும் Borewell No.2-ல் 50mm GI pipe ஆகிய பழுதுகள் சரிசெய்தல். | 9800 | 9216 |
| 3 | 3/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கள்ளியடப்பு திருப்பில் 4” pvc pipe supply line பழுது சரிசெய்தல். | 2000 | 1843 |
| 4 | 5/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குழந்தை ஏசு சூலனியின் பகிர்மான குழாயை காளிதாஸ் காலனியின் supply line –உடன் இணைத்தல். | 4600 | 4473 |
| 5 | 6/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட Borewell No.12–ன் 7.50 Hp மோட்டாரை தூக்கி பார்த்து அதில் ஏற்பட்ட்ள்ள பழுதுகளை சரிசெய்யவும் போர்வெல் எண்.7 மற்றும் 11ன் Gate valve பழுதாகி உள்ளதால் புதியதாக Gate Valve பொருத்தவும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி முன்புறம் உள்ள Sluice valve –ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல். | 13870 | 13121 |
| 6 | 7/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பண்டார விளையில் அரசு நடுநிலைப்பள்ளி அருகிலும் சுகந்தம் திருமண மண்டபம் அருகிலும் 3” pvc pipe line-ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்தல். | 3000 | 2773 |
| 7 | 8/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட செட்டியதெருவில் புதியதாக ஒரு Sluice Valve அமைத்தல். | 10500 | 10014 |
| 8 | 9/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகில் உள்ள OHTக்கு செல்லும் 6” AC பம்பிங் மெயின் அரசு மருத்துவமனை அருகில் உடைவு ஏற்பட்டது சரிசெய்தல். | 6000 | 5291 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 10/2011-12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 20–ம் வார்டில் எம்ஜிஆர் தெருவில் அரசு மருத்துவமனை அருகில் கழிவு நீர் செல்லும் குழாய் பழுது சரிசெய்தல் மற்றும் தினசரி சந்தையில் precast slab அமைத்தல். | 11200 | 9290 |
| | | **மொத்தம்** | **64470** | **59223** |

**அ.குறிப்பு**: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண். 1625 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 4**

குளச்சல் நகராட்சியில் பொதுநிதி 2010–11 மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்தில் காமராஜர் பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்துமிடம் அமைத்தல் மற்றும் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் பேருந்து நிலைய கட்டிடம் பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசுதல் பணிக்கு 20.5.11 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.முரளிதரன் ஒப்பந்தக்காரர் | 4.42% மதிப்பீட்டை விட கூடுதல் (ரூ.715300/–) |
| 2. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் | 7.27% மதிப்பீட்டைவிட கூடுதல் (ரூ.734800/–) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இருவரும் மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். எனவே இருவரிடமும் விலை விகிதத்தை குறைத்து வழங்க கேட்டு ஒப்பந்ததாரர்களிடம் 20.5.2011 அன்று Negotiation கேட்டு கடிதம் வழங்கப்பட்டது.

21.5.2011 அன்று மேற்படி ஒப்பந்ததாரர்கள் இருவரிடமிருந்தும் பெறப்பட்ட கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவை அரசு நிர்ணயித்த விலை விகிதத்தை விட பொதுச்சந்தையில் கூடுதலாக உள்ளதாகவும், தான் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ள விலை விகிதத்தை இதற்கு மேல் குறைக்க இயலாது எனவும் தங்களது கடிதங்களில் தெரிவித்துள்ளார்கள். எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள அதாவது மதிப்பீட்டைவிட 4.42% கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.P.முரளிதரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி பொறியியல் துணைவிதி பிரிவு 2.7.2ன்படி பொதுமக்கள் நலன்கருதியும் பணி அவசர அவசியம் கருதி மேற்படி ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் கூறியுள்ள கருத்தினை ஏற்று மேற்படி பணிக்கு திரு.P.முரளிதரன் ஏற்கனவே கோரியுள்ள மதிப்பீட்டைவிட 4.42% கூடுதலாகவுள்ள விலைவிகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**:
1.மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1622 நாள்.11.5.2011–ன்படி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
2.நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2–ன்படி மேற்படி பணிக்கு இருவரில் குறைந்த விலை விகிதத்தில் மதிப்பீட்டைவிட 4.42% கூடுதலான விலை விகிதத்தை ஏற்று திரு.P.முரளிதரன் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்.இ1/1815/2011)
**தீர்மானம் எண். 1626 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 24–வது வார்டைச் சார்ந்த நரிக்கல் சாலை பகுதியில் திரு.S.அந்தோணி தளவாய் என்பவர் நகரபுல எண்.P2-21/5-ல் உள்ள தனக்கு சொந்தமான 1½ சென்ட் காலி மனையினை தானபத்திரம் எண்.226/2011–ன்படி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பொதுசாலை போடுவதற்கு நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

மேற்படி பட்டா சொத்தினை நகராட்சியின் சொத்தாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1627 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் நான்கு துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணை மூ.மு.எண்.8629/2010/ஜே3. நாள்.21.03.2011–ன் மூலம் அனுமதிக்கப்பட்டது. மேற்படி நான்கு பணியிடங்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கால நீட்டிப்பு பெறப்பட்டு இறுதியாக 1.10.2009 முதல் 30.09.2010 வரை கால நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவல் மேற்படி நான்கு துப்புரவு பணியாளர்கள் பணியிடங்களின் அவசியத்தை கருதி 1.10.2010 முதல் மேற்படி பணியிடங்களை நிரந்தரமாக நீட்டித்துக் கொள்ள ஆணை வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை கேட்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் முடிவு செய்யலாம்

(ந.க.எண்.எச்.1/4427/2010)

**தீர்மானம் எண். 1628 ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 மே திங்கள் 27.05.2011–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 17 ஆழ்துழை கிணற்றிலிருந்து 11 மேல்நிலை நீர்தொட்டிகளில் நிரப்பப்பட்டு நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் ஏற்ற இறக்கமாக உள்ளதால் வால்வுகளின் உதவி கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யும்போது குடிநீர் பகிர்மான குழாய் உடைவு, பிரதான குழாய் உடைவு, மோட்டார் பழுது, வால்வு பழுது ஆகிய பழுதுகள் ஏற்படுகின்றன. மேற்படி பழுதுகளை சரிசெய்ய 2011–2012–ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.300000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.இ2/2259/2011)

**தீர்மானம் எண். 1629 19 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உறுப்பினர்கள் MAR.கலீல் ரகுமான் மற்றும் M.நசீம் ஆகியோர் இப்பொருளை ஒத்திவைக்க கோரினர். ஏனைய உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவின்பேரில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காரிதாஸ் காலனி, பீச் 1–No. பகுதி, பீச் சர்ச் முன்னால், பீச் முக்கு, ஏசுதாஸ் காலனி, மார்கெட் tank , மெயின்ரோடு, இலப்பவிளை, சாஸ்தான்கரை ஆகிய இடங்களில் உள்ள வால்வுகளுக்கு வால்வு தொட்டிகள் இல்லாததினால் அடிக்கடி மண் நிறைந்து வால்வு திறக்க முடியாத சூழ்நிலை உருவாகிறது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிப்படைகிறது. எனவே மேற்குறிப்பிட்ட இடங்களில் வால்வு தொட்டிகள் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.110000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.இ2/2260/2011)

**தீர்மானம் எண். 1630 கலந்துகொண்ட 19 உறுப்பினர்களில் கலீல் ரகுமான் மற்றும் நசீம் ஆகிய உறப்பினர்கள் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனைய உறுப்பினர்களின் ஆதரவில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–க்கு உட்பட்ட பகுதிகளான காரிதாஸ் காலனி, எபிகோர் காலனி, KSSS காலனி, மாதா அமிர்தானந்தா காலனி, குழந்தை ஏசு காலனி மற்றும் வெள்ளி பிள்ளையார் கோவில் சாலை முதல் ராஜாக்கமங்கலம் செல்லும் சாலை ஆகியவற்றில் குடிநீர் குழாய் பழுதுகள் சரிசெய்யும் பொழுது சிமெண்ட் தளம் உடைக்கப்பட்டதால் சாலை குண்டும், குழியுமாக மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளது. எனவே மேற்ல குறிப்பிட்ட சாலைகளில்

சிமெண்ட் காங்க்ரீட் கொண்டு patches பண்ணவும் மேலும் அமிர்தானந்தா காலனி அருகில் சிறிது தூரம் வடிகால் அமைத்து மூடுசிலாப் அமைக்கவும் மற்றும் ஒரு சிறு பாலம் அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.250000/— தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.இ1/2499/2011)

**தீர்மானம் எண். 1631 கலந்துகொண்ட 19 உறுப்பினர்களில், உறுப்பினர்கள் MAR.கலீல் ரகுமான் மற்றும் M.நசீம் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனைய பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9—ல் மரமடியில் பொது கழிப்பிடம் எண்.10,11—ல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளதால் பொது கழிப்பிடத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய திட்ட மதிப்பீடு ரூ.50000/— தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

(ந.க.எண்.இ2/1988/2011)

**தீர்மானம் எண். 1632 கலந்துகொண்ட 19 உறுப்பினர்களில், உறுப்பினர்கள் திரு.கலீல் ரகுமான் மற்றும் M.நசீம் ஆகியோர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனைய பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர்.அம்பேத்கர் தினசரி சந்தையில் வடக்கு தெற்காக இருக்கும் மீன் மார்க்கெட்டில் தெற்கு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையின் கூரை மழை மற்றும் காற்றினால் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேலும் மீன் மார்க்கெட்டில் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையின் கூரை ஏற்கனவே விழுந்து விட்டதாலும் மீன் வியாபாரம் செய்பவர்களும் பொதுமக்களும் வெயில் மற்றும் மழையினால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதாலும் நிரந்தர கொட்டகை அமைப்பதற்கு ரூ.600000/—க்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.இ1/2499/2011)

**தீர்மானம் எண். 1633 கலந்துகொண்ட 19 உறுப்பினர்களில், உறுப்பினர்கள் திரு.கலீல் ரகுமான் மற்றும் நசீம் ஆகியோர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனைய பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சிக்குட்பட்ட 17—வது வார்டில் பழைய மார்க்கெட் சாலையிலிருந்து நரிக்கல் சந்திப்பு வரை குண்டும் குழியுமாக பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி தார்ச்சாலை புதுப்பித்தல் பணிக்கு ரூ.350000/— மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதிநிலையை உத்தேசித்து திட்ட நிதி அல்லது பொது நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.இ1/2247/2011)

**தீர்மானம் எண். 1634 கலந்துகொண்ட 19 உறுப்பினர்களில், உறுப்பினர்கள் கலீல் ரகுமான் மற்றும் M.நசீம் ஆகியோர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனைய பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 மற்றும் 23–ல் நரிக்கல் சந்திப்பிலிருந்து புல்லன்விளை வரை உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் ரோடுபக்கம் பக்க சுவர் உடைந்து கழிவு நீர் வெளியேறி கொண்டிருக்கிறது. இதனால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேட்டினால் நோய்கள் பரவும் நிலையில் உள்ளது. எனவே வடிகாலில் புதியதாக பக்க சுவர் கட்டவும் வடிகால் மீது மூடு சிலாப் அமைக்கவும் அருகில் உள்ள குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்து சிமெண்ட் தளம் அமைக்கவும் மதிப்பீடு ரூ.1000000/– தயாரிக்கப்பட்டு நிதிநிலையை உத்தேசித்து பொது நிதி அல்லது திட்ட நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.இ1/2596/2011)

**தீர்மானம் எண். 1635 கலந்துகொண்ட 19 உறுப்பினர்களில், திரு.கலீல் ரகுமான் மற்றும் திரு.நசீம் ஆகியோர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனைய பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி